தேர்தல் அதிகாரி ஏற்கனவே அது பற்றிய வேலைகளைத் துரிதமாக நடத்திக்கொண்டு வந்தார்கள். அதனால், இம்மாதிரி உத்தரவு இடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் அமைச்சர் அவர்கள் இப்படிச் சமாதானம் சொல்லி இலாகாவிலுள்ள பலவீனத்தை மறைக்கக் கூடாது. ஆர். டி. எல். ஏ. இலாகாவிற்கும், பஞ்சாயத்துத் தேர்தலுக்கு உத்தரவிடக்கூடிய இலாகாவிற்கும் இடையே இருக்க வேண்டிய இணைப்பில் உள்ள பலவீனம் இதற்குக் காரணமா? ஒரு பகுதியை நகராட்சி மன்றமாக மாற்றுவதற்கான விஷயம் ஒரு இலாகாவில் பரிசீலனையில் இருக்கிறதென்றால், அதற்கு முன்பே, அந்தப் பகுதியை ஏன் தேர்தலிருந்து விலக்கி யிருக்கக் கூடாது? அதற்கான காரணம் என்ன என்று அமைச்சர் அவர்கள் விசாரிக்கவில்லையா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பரிசீலனையில் இருக்கும் பகுதியை யெல்லாம் தேர்தலிலிருந்து நிறுத்திவிட்டால், பின்பு சங்கடங்கள் ஏற்படும். அதனால்தான் தேதியை நிர்ணயித்தார்கள். இங்கிருந்து முடிவு செய்த பிறகு, தேர்தலை நிறுத்தி வைக்கும்படி உத்தரவிடப்பட்டது. 172-வது செக்ஷன்படி சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும் 17(2) செக்ஷனில் சர்க்காருக்குப் போதுமான அதிகாரம் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நகராட்சி மன்றமாக மாற்றுவதைப் பற்றி முடிவு எடுக்கிற வரையில் இப்பொழுதிருக்கும் பஞ்சாயத்து உறுப்பினர்களின் பதவி காலம் நீடிக்கப்படுமா? அல்லது வேறு ஏதாவது முடிவு எடுக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சட்டப் பிரகாரம், மற்றப் பஞ்சாயத்துக்களுக்கு எப்படியோ அப்படிதான் இதற்கும். அங்கெல்லாம் எப்படிச் சாதாரணமாக முடிகிறதோ அது போல்தான் இதற்கும்.

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி

* 76. கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி:** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து 1964 செப்டம்பரில் எக்ஸ்ரே பிலிம்கள் களவாடப்பட்டனவா?

(இ) ஆமென்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த பர்னார்டு கதிரியல் நிறுவனத்தில் (Barnard Institute of Radiology) 1-4-1963-லிருந்து 26-6-1964 தேதி வரை எக்ஸ்ரே பிலிம்கள் கணக்கில் குறைந்து அரசாங்கத்திற்கு அதனால் நஷ்டமேற்பட்டதுபற்றிய அறிக்கை ஒன்று மருத்துவத் துறை நெறியாளரிடமிருந்து கிடைத்துள்ளது.

(இ) இவ்விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

23rd January 1965]

திரு. கரு. சீமைச்சாமி: களவாடப்பட்ட எக்ஸ்ரே பிலிம்களினுடைய மதிப்பு என்ன என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அகௌண்டென்ட்-ஜெனரல் கொடுத்த கணக்குப் பிரகாரம், ரூ. 7,185 பெறுமான பிலிம்கள் குறைந்திருக்கின்றன.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி

*77. **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:

சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள மருத்துவக் கல்லூரி எப்பொழுது திருநெல்வேலிக்கு மாற்றப்படும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் இக்கல்லூரிக்குத் தேவையான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டவுடன் அது அங்கு மாற்றப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : "மருத்துவக் கல்லூரிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டவுடன்" என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தக் கட்டடம் கட்டி முடிக்க எவ்வளவு நாளாகும் என்று அமைச்சர் அவர்கள் கூற முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கொஞ்ச நாள் ஆகும்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவவேண்டும் என்பதற்காகக் கீழ்ப்பாக்கத்திலிருக்கும் மருத்துவக் கல்லூரியை அங்கே கொண்டுபோக வேண்டியது அவசியந்தானா? இங்கேயுள்ள கல்லூரியை இங்கேயே தொடர்ந்திருக்கச் செய்துவிட்டு திருநெல்வேலிப் பகுதியில் புதிய மருத்துவக் கல்லூரி ஒன்றைத் துவக்குவதற்கு வசதி செய்து தரக் கூடாதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: புதிய மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவது பற்றியல்ல இப்பொழுதிருக்கும் கேள்வி. இங்கேயிருக்கக்கூடிய கல்லூரியை மாற்றுவது பற்றித்தான்.

புலவர் கா. கோவிந்தன்: சென்னை நகரிலுள்ள மருத்துவக் கல்லூரியைத் திருநெல்வேலிப் பகுதிக்கு மாற்றாமல் இங்குள்ளதை இங்கேயே நிறுத்திவிட்டு, அங்கே புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தக் கூடாதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இங்குள்ள மருத்துவக் கல்லூரியை மாற்றுவதாகத்தான் தற்போது அரசாங்கம் எடுத்திருக்கின்ற முடிவு. புதிய மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதென்றால் இப்பொழுது இயலாது.